23rd January 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பரிசிலனை செய்யப் படுவதற்கு ஒரு கட்டம் இருப்பதாக, இந்த சமயத்தில்தான் பரிசிலனை செய்யப்படும் என்று சொல்லவில்லை. அப்போதைக் கப்போது பரிசிலனை செய்து, எப்போது அரசாங்கம் முன்னதாக விடுதலை செய்ய வேண்டுமென்று முடிவு செய்கிறார்களோ அப்போது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும் என்றுதான் சொன்னேன். ஆகவே, தவறான கருத்து கொள்ளவோ அல்லது தவறான கருத்து தெரிவிப்பதோ சரியல்ல.

Tamil medium in Colleges

MR. SPEAKER : அடுத்த கேள்வி "தமிழ் போதனமொழி" என்பது பற்றியது. அதற்கு அடுத்த மூன்று கேள்விகளும் அதைப்பற்றித்தான். ஆகவே இந்த நான்கு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம்.

SRI K. VINAYAKAM : Sir, the questions may be on the same subject but they are on different aspects of the subject. If all the questions are answered together, there would not be many opportunities for those who have put questions to put supplementary questions on different aspects. So, please take them individually.

MR. SPEAKER : I have no objection.

* 89 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வருடம் எத்தனை கல்லூரிகளில் தமிழ் போதனை மொழி ஆக்கப்பட்டுள்ளது ?

(இ) இக்கல்லூரிகளில் படிப்போரின் தொகை என்ன ?

(உ) இன்னும் எத்தனை வருடங்களில் ராஜ்யத்திலுள்ள எல்லா கல்லூரிகளிலும் தமிழ் போதனை மொழியாகும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Tamil has been made the medium of instruction only in the first year of the B.A. decree course in the Government Arts College, Coimbatore.

(*b*) Nine hundred and sixteen of whom 100 are receiving instruction in the Tamil medium.

(*c*) Tamil is to be made the medium of instruction in the three year B.A. degree courses in all the colleges in the State from 1963-64 according to the present programme.

SRI A. VEDARATHNAM : தமிழை போதனமொழியாக்க வேண்டுமென்று எத்தனை கல்லூரிகளிலிருந்து விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ? அவற்றில் எவை எவை ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன ?

MR. SPEAKER : அதுதான் சொன்னேன், நான்கு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக் கொள்ளலாமென்று. இது மூன்றாவது கேள்வியில் வருகிறது. இதில் வரவில்லை.

[23rd January 1961

SRI K. VINAYAKAM : May I know what the experience of this Government is after the introduction of Tamil as the medium of instruction in that college? Is the standard maintained properly or is it deteriorating?

THE HON. SRI C. SUBRAMANIAM : This is being implemented only from this year and only two terms have expired. The general experience is quite encouraging.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, தமிழ் நூல்கள் இல்லை என்ற காரணத்தால் காலம்தள்ளி இருந்தது போய் தகுதியான நூல்கள் அத்தனையும் விளங்குகிறபோது ஏன் அண்மையில் இந்த ஆண்டிலேயே எல்லா கல்லூரிகளிலும் தமிழை போதனாமொழியாக வைக்கக் கூடாது?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது முதல் ஆண்டுக்கு வேண்டிய எல்லா புத்தகங்களும் தயார் செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் புத்தகங்கள் தயாரிக்கவேண்டும். முதலில் இவை எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு ஒரு கல்லூரியில் முதலில் செய்ய ஆரம்பித்து பின்னால் மற்ற கல்லூரிகளில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று அந்த முறையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் செய்து கொண்டு வருகிறோம். இன்னும் சில கல்லூரிகளில் அடுத்த வருடத்திலிருந்து தமிழில் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்கிற ஒரு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED : Will the Government await the results of this experiment before introducing it in other colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : As far as this Government are concerned, it is not introducing Tamil medium in any other college but it cannot stand in the way of private-managed colleges coming forward to introduce Tamil.

* 90 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any application has been received from private colleges for funds for the introduction of Tamil Medium?

THE HON. SRI C. SUBRAMANIAM : No private college has applied to Government for the assistance for the introduction of Tamil medium. However, the College Tamil Committee has made representations to Government requesting financial assistance to private colleges which come forward to introduce Tamil medium. This is under the consideration of Government.

SRI A. VEDARATHNAM : தமிழை போதனாமொழியாக்குவதற்கு கல்லூரிகளுக்கு ஏதாவது தனி சலுகை இருக்கிறதா? அப்படியானால் ஆண்டுதோறும் அதற்கு என்ன செலவாகிறது? அதற்கு அரசாங்கம் எவ்வளவு உதவி கொடுக்கமுடியும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை விட அதிகமாக செலவாகக் கூடியதில்லை. ஆனால் அதில் படிக்கக் கூடிய மாணவர்களுக்கு சில சலுகைகள் கோவை கல்லூரியில் கொடுக்கப்